

# ‘ஜெயித்து வாழ்ந்திட’ வாலிபர் செய்திகள்!

“வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்”
(சங்கீதம். 127:6)

(சிருஷ்டிகரிடம் சரணடைந்து வாழ்ந்திட அழைக்கும் செய்திகள்)

| 15.02.2021 | வாலிபனே, உன் காலத்தை நித்தியத்திற்கு செலவிடு! |
|---|---|

**வா**லிபர்களே, ஒன்றை நீங்கள் எப்பொழுதும் உங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். கர்த்தருடைய ஜீவனுள்ள நாமத்தின் பிரபல்யத்திற்கென்று நீங்கள் மனப்பூர்வமாக, கல்வாரி அன்பால் ஏவப்பட்டுச் செலவிடாமல், சுயநல நோக்கத்தோடு சேர்த்துக் குவித்து வைக்கும் உங்கள் திரண்ட ஐசுவரியத்தால் நீங்கள் இறுதியில் அடையப் போவது, ஒன்றுமில்லை!

நமது வாழ்நாட்காலம் விரைவாக ஓடி, மெழுவர்த்தியைப் போலக் கரைந்து மறைந்துகொண்டிருக்கின்றது. நம்மில் அநேகர் காலத்தின் அருமையை இன்னமும் அறிந்து வாழவில்லை. கர்த்தர் நமக்கு கிருபையாகக் கொடுத்த சிறிய ஆயுட்காலத்தை அவரது ஜீவனுள்ள நாம மகிமைக்கென்று மாத்திரமே நாம் செலவிடக் கடனாளிகளாயிருக்கின்றோம். இவ்வுலகத்தில் எவ்வித நோக்கமுமின்றி வீணே தங்கள் நேரத்தைப் பாழ்கடித்து வாழும் உலக மக்களைப்போல, நாம் வாழாமல், நமது பொன்னான நேரத்தைக் குறித்து கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும்.

இளம்பிராயத்தில், தேவன் நமக்கு ஈவாகக் கொடுத்துவரும் ஒவ்வொரு மணி நேரத்திற்காகவும் அவருக்கு நம் இதயத்தின் அடித்தளத்திலிருந்து நன்றி கூறி, அந்த மணி நேரங்களையெல்லாம் கர்த்தருக்காகவே செலவிடுவதில் கருத்தாயிருங்கள்!

உங்கள் வலிமையான ஜீவிதக் கப்பல், நித்திய ஜீவகரையை எட்டிப் பிடிக்கும் முன்னர், உங்கள் சரீர பெலன் குன்றிப் போகுமுன்னால், உங்கள் கண்ணின் பார்வை மங்கலாகுமுன், கர்த்தர் கிருபையாகக் கொடுத்த உங்களின் இளமையான வாழ்நாள் காலத்தை, பரம தந்தையின் சுவிசேஷப் பணிக்கும், ஆத்தும ஆதாய அறுவடை பணிக்கும் முழுமூச்சாய் அர்ப்பணியுங்கள்!

**- வாலிபம் இயேசுவுக்கே**